# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் | வணிக மாத இதழ்

Volume: 13 | Issue : 12 | MARCH 2025 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE



பிப்ரவரி 28 தாய்லாந்து
மார்ச் 10 சிங்கப்பூர் மலேஷியா
மார்ச் 18 அந்தமான்
மார்ச் 25 வியட்நாம் கம்போடியா
ஏப்ரல் 25 ஹாங்காங்
ஏப்ரல் 5 காஷ்மீர்
ஏப்ரல் 15 துபாய்
மே 17 சிம்லா மணாலி
மே 23 ஐரோப்
மே 23 சிங்கப்பூர் மலேஷியா

BOOK NOW 99 43 03 1237

VH VEDHAVALLI HOLIDAYS

வேதவல்லி ஹாலிடேஸ்

82/235, காமராஜர் சாலை, மதுரை




## ஏப்ரலில்

# பொலீம் 2025

## உறுப்பினர் சேர்க்கை மேளா




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536



METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்



# மெட்ரோ ஷூ மார்ட்



16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

**PH : 23322364, 2331297, 4382343**

---

TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer :

## Sri Balameenakshi Aqua Pumps


AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems

124, West Masi Street, Near Murugan Temple, Madurai - 625 001. Cell : 93616 25696

**H.O. : Madurai Pipes**

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 4378524, Cell : 94437 95317
B.O. : 32A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014. Cell : 99946 57349




---

KARPAGAM GROUP OF COMPANIES
SINCE 1985

# Karpagam

## Auto Group of Companies

**Dealers in Automobile Spare Parts**

53, 56, 67, Tamil Sangam Road, Madurai - 625 001. Tamilnadu
Ph. 0452-4375875, 2342267, 2340067 | email : stores@karpagamauto.com

# தலைவர் அறிக்கை

## அஸ்கிதெஞ்கோ மொன்னு பொறெ நமஸ்கார்...

K.K. தினேஷ், தலைவர்

சீனா, துருக்கி போன்ற மேலை நாடுகளில் நடத்துவது போல் உலகத்தரம் வாய்ந்த பாரத் டெக்ஸ் என்ற சர்வதேச ஜவுளி கண்காட்சி ஜவுளித் தொழில் வளர்ச்சிக்கு உதவும் நோக்கத்தில் மத்திய அரசு ஆண்டுதோறும் நடத்தி வருவது வரவேற்கத்தக்கது என்றாலும், டெல்லியில் மட்டுமே நடத்தப்பட்டு வருகிறது. டெல்லி என்பது உற்பத்தியாளர்களையோ உற்பத்தி செய்யும் தொழிற்சாலையோ இல்லாத இடமாக உள்ளது. ஜவுளித் துறை பொறுத்தவரை இந்தியாவில் மகாராஷ்ட்ரா, தமிழ்நாடு, குஜராத் போன்ற மாநிலங்கள் முன்னிலையில் உள்ளன. இந்த மாநிலங்களில் இது போன்ற சர்வதேச ஜவுளி கண்காட்சி நடத்த வேண்டும் என்று மத்திய ஜவுளித்துறை அமைச்சகத்திற்கு கோரிக்கை வைத்து வருகின்றனர். மத்திய அரசு இந்த கோரிக்கையை ஏற்று தென்மாநிலங்களில் நடத்தினால் தென் மாநில ஜவுளித்துறையினருக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

**பொலீம் 2025** – நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை உறுப்பினர் சேர்க்கை மேளா நடத்தி வருவது அனைவரும் அறிந்ததே!. அதன்படி, நடப்பாண்டின் ஏப்ரல் மாதத்தில் பொலீம் 2025 – உறுப்பினர் சேர்க்கை மேளா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. நமது சேம்பர் உறுப்பினர்கள், தங்களுக்கு தெரிந்த நம் சமூக தொழில் முனைவோர்களை இந்த பொலீம் நிகழ்ச்சியின்போது அழைத்து அறிமுகம் செய்து உறுப்பினராக சேர்க்கக் கேட்டுக்கொள்கிறோம். இந்த நிகழ்வின் போது புதிதாக இணையும் உறுப்பினர்களுக்கும், புதிய உறுப்பினர்களை அறிமுகம் செய்பவர்களுக்கும் நினைவுப் பரிசு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த மாதம் நடைபெற்ற மகளிர் தின சிறப்பு நிகழ்ச்சியில், இதுவரை நடத்தப்பட்ட மாதாந்திர நிகழ்ச்சியை விட அதிக எண்ணிக்கையில் வருகை பதிவு இருந்தது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. நிகழ்ச்சியில், மதுரை காந்தி NMR சுப்பராமன் கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவிகளும் பங்கேற்று சிறப்பித்தனர். இந்த முயற்சி எடுத்த செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன்.

2025-26 நிதியாண்டு பிறக்கிறது. அனைத்து தொழில் முனைவோர்களும், தங்களது நிறுவன வளர்ச்சிக்காக புதிய திட்டங்களுடன், ஆக்கப்பூர்வ முயற்சிகளுடன் செயல்பட முனைந்திருப்பீர்கள். உங்கள் அனைவரின் இலக்கும், நோக்கமும் வெற்றிபெற ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.


SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



# பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

**11.02.2025** – திருவாரூரில் அமைந்துள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் ஸௌராஷ்ட்ர மொழி மற்றும் கலாச்சார வளர்ச்சிக்கு மதுரையில் சிறப்பு மையத்தை (சி.எஸ்.எல்.சி) அமைக்க இந்திய அரசின் கல்வி அமைச்சருக்கு மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்களின் பரிந்துரையைக் கோரி திரு. நாகேஸ்வரன் சோமி அவர்களின் தலைமையிலான சௌராஷ்ட்ர பிரதிநிதிகள் 11 பேர் சென்னை ராஜ்பவனில் மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்களைச் சந்தித்தனர். இந்த சந்திப்பில், சேம்பர் சௌராஷ்ட்ர சேம்பர்–ம் கலந்து கொண்டது.

**13.02.2025** – மதுரை வணிகவரி கமிஷனர் திருமதி. கீதா ஜீவன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற வணிக வரி குறைதீர் கூட்டத்திற்கு சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

18.02.2025 – 3வது செயற்குழு கூட்டம் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இதில் சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர்.

**20.02.2025** – மதுரை மாநகராட்சிக்கு முதல் பெண் கமிஷனராக பொறுப்பேற்றுள்ள திருமதி. சித்ரா விஜயன் அவர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்து, வாழ்த்து தெரிவித்ததுடன், பிப்ரவரி மாத லாப் ஸமாச்சார் இதழ் வெளியீடும் செய்யப்பட்டது.

**04.03.2025** – மாலை 6 மணிக்கு சேம்பர் வளாகத்தில் மகளிர் தின சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சிறப்பு விருந்தினராக, திருமதி. சொர்ணராஜா கொச்சி, MD., Tradiart Academy Pvt. Ltd., Banglore, Founder & Guru - Tanjore Art Studio அவர்களும், கௌரவ விருந்தினராக டாக்டர். நிவாஷினி G.S.V. Conservative Dentist & Endodontist அவர்களும் கலந்து கொண்டனர்.மதுரை காந்தி என்.எம்.ஆர். மகளிர் கல்லூரியில், இளங்கலை வரலாறு இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவி செல்வி. K.V. விஷ்ணு பிரியா மகளிர் தின சிறப்புரையை நிகழ்த்தினார். இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். திருமதி. பிரதீபா குமரேசன் அவர்கள் கூட்டத்தை நடத்திச் சென்றார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.



# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

சமீபத்தில், மதுரை விமான நிலைய கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தக கோரி விமான நிலைய அதிகாரியை நமது சேம்பர் குழுவினர் சந்தித்து மனு அளித்திருந்தனர். இந்த நிலையில், மதுரை விமான நிலையம் குறித்து புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், மதுரை விமான நிலையத்துக்கு ஒரு வாரத்துக்கு 140 விமானங்கள் வந்து செல்கின்றன. ஒரு மணி நேரத்தில் மதுரை விமான நிலையம் உள், வெளிநாட்டு பயணிகள் 700 பேரை கையாளுவதாகவும், அதிகரித்துள்ள பயணிகளின் எண்ணிக்கை, கட்டமைப்பு வசதிகளால் மதுரை விமான நிலையம் 3ம் நிலையில் இருந்து 2ம் நிலைக்கு தரம் உயர்ந்துள்ளதாக மத்திய விமான போக்குவரத்து அமைச்சகம் இந்த புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பொலீம் 2025 – மெம்பர்ஷிப் மேளா வரும் ஏப்ரல் மாதம் நடைபெற இருக்கிறது. அங்கத்தினர்கள் அனைவரும் புதிய உறுப்பினர்களை இணைத்து சேம்பர்–ஐ வளர்ச்சி பெறச் செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்முனைவோர்களுக்கான புத்தாண்டு பிறக்கிறது. சென்ற நிதி ஆண்டில் திட்டமிட்ட பட்ஜெட் மற்றும் அனுபவங்களைக் கொண்டு பிறக்க இருக்கும் 2025–2026 நிதி ஆண்டில் படிகளாக்கி நமது இலக்கை நோக்கி முன்னேற அனைவருக்கும் இதழ் குழு சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## திருக்குறள்

**பகையகத்துச் சாவார் எளியர் அரியர்**
**அவையகத்து அஞ்சா தவர்.**


**பொருள்:** போர்க்களத்தில் பகைவர்களுக்கு அஞ்சாமல் உயிர் விடக்கூடியவர்கள் பல பேர் உண்டு. ஆனால் சபையில் அச்சமில்லாமல் பேசக்கூடியவர்கள் வெகு சிலரே.

அதிகாரம் 73 | அவை அஞ்சாலை | அங்கவியல்

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544

Exclusive Showroom for U'r Branded Products
IDEAL innerwear
ANAND
Viking
Prithvi INNER WEARS
NAIDU HALL THE FAMILY STORE
JOCKEY INNER WEAR
Poomex
MANGAI NIGHTIES
RASATHE DARLING NIGHTIES
YOKE'S NIGHTY
& All Branded Innerwears for All
Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.
THE BABY SHOP
அலங்கார் தி பேபி ஷாப்
உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402
HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402




*With Best Compliments*

BVK GROUP

FINANCE | LAND | SUN | WIND

Shri. **Bala V Kutti**

CHAIRMAN

BVK GROUP OF COMPANIES

## Indowind Energy Ltd
## Indus Finance Ltd
## EverOn Power Ltd
## BeKae Props P Ltd
## BVK Foundation

OFFICES

Chennai | Mumbai | Madurai | Bangalore

SITES

Tamil Nadu - A'boly, Nettur, Palladam, Gudimangalam, Courtallam
Karnataka - Gadag, Chitradurga, Hanumansagar
Gujarat - Nanichandur | Andhra Pradesh - Guntur

contact@bvkgroup.com www.bvkgroup.com






# மகளிர் தின சிறப்பு நிகழ்ச்சி





மார்ச் 8 – மகளிர் தினத்தை முன்னிட்டு நமது சேம்பர் நிகழ்ச்சி மகளிர்க்கானதாக இருக்க வேண்டும் என்று இந்த மாத தொழில் வர்த்தக கூட்டம் மகளிரை மையப்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்டது.

04.03.2025 அன்று மாலை 6 மணிக்கு சேம்பர் வளாகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். சிறப்பு விருந்தினராக, திருமதி. சொர்ணராஜா கொச்சி, MD., Tradiart Academy Pvt. Ltd., Banglore, Founder & Guru - Tanjore Art Studio அவர்களும், கௌரவ விருந்தினராக டாக்டர். நிவாஷினி G.S.V. Conservative Dentist & Endodontist அவர்களும் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு மதுரை காந்தி என்.எம்.ஆர். சுப்பராமன் மகளிர் கல்லூரி மாணவிகள் மற்றும் பேராசிரியர்களும், ஸௌராஷ்ட்ரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களும், சௌபாக்யா மகளிர் குழுவினரும் மற்றும் சமூக மகளிர் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

கூட்டத்தின் துவக்கத்தில், கல்லூரி மாணவிகள் இறை வணக்கம் பாடினர்.

தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்களின் வரவேற்புரைக்குப் பிறகு, திருமதி. துர்கா மோகன்ராம், திருமதி. ஜோதி லக்ஷ்மி ஸ்ரீநிவாசன், திருமதி. பரமேஸ்வரி சூரியபிரகாஷ், திருமதி. பிரதீபா குமரேசன் ஆகியோர் கூட்டத்தை இணைந்து நடத்திச் சென்றனர்.

திருமதி. சொர்ணராஜா கொச்சி அவர்களை, செல்வி. S.S. கல்பலதிகாவும், டாக்டர். நிவாஷினி.G.S.V. அவர்களை, செல்வி. B.J. அருணேஷ்வரியும் மிக அருமையாக மேடையில் அறிமுகம் செய்து விருந்தினரை பேச அழைத்தனர்.

நிகழ்ச்சியின் முதலாவதாக, மதுரை காந்தி என்.எம்.ஆர். மகளிர் கல்லூரியில், இளங்கலை வரலாறு இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவி செல்வி. K.V. விஷ்ணு பிரியா மகளிர் தின சிறப்புரையை நிகழ்த்தினார். அவரது தமிழ் உச்சரிப்பும், பாரதி கண்ட புதுமைப் பெண்ணின் தோற்றத்துடன் கம்பீரமான பேச்சு பெண்மையை போற்றச் செய்தது.

அவரைத் தொடர்ந்து, கௌரவ விருந்தினர் டாக்டர். நிவாஷினி அவர்கள், இன்றைய மகளிரின் தேவை மற்றும் எதிர்பார்ப்பு என்ற தலைப்பிலும், சிறப்பு விருந்தினர் திருமதி. சொர்ண ராஜா கொச்சி அவர்கள் சமூகத்தில் மகளிர்க்கான வாய்ப்புகள் என்கிற தலைப்பிலும் மிக அழகாக பேசினர்.

அனைவரின் பேச்சையும், கலந்து கொண்ட அங்கத்தினர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் கேட்டு மகிழ்ந்தனர், பயனுள்ள தகவல்களையும் பெற்றனர்.

சேம்பர் சார்பாக, விருந்தினர்கள் இருவருக்கும் நினைவுப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர். உடன், சிறப்புப் பேச்சாளர் செல்வி. விஷ்ணு பிரியாவும் கௌரவிக்கப்பட்டார்.

மதுரை காந்தி எம்எம்ஆர் சுப்பராமன் மகளிர் கல்லூரி நிர்வாகத்தின் சார்பாக சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் கௌரவிக்கப்பட்டனர்.

பரமேஸ்வரி சூரியபிரகாஷ் அவர்கள் அடுத்த மாதம் நடைபெற இருக்கும் நிகழ்ச்சி பற்றி அறிவித்தார்.

நிறைவாக, ஜோதி லக்ஷ்மி ஸ்ரீநிவாசன் அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

JC கணேசன் மருத்துவமனை
NABH Accredited
அழகர்கோயில் ரோடு, சர்வேயர் காலனி, மதுரை - 7
98421 03579, 98427 03579, 97886 03579
jcganesan@gmail.com , Facebook.com/jcortho

Dr. J.C. GANESAN
MBBS., D.Ortho., DNB Ortho, MNAMS, Mch ortho(UK)

Dr. MALARKODI GANESAN
MBBS., DGO, DNB(org)

சிறப்பு சிகிச்சை முறைகள்

- மூட்டு மாற்று அறுவை சிகிச்சை
- ஆர்த்திராஸ்கோப்பி சிகிச்சை
- சேராத எலும்பை சேர்க்கும் / வளர்க்கும் வளையமுறை இல்லிசாரோவ் சிகிச்சை
- முதுகு, மூட்டு, தோள்பட்டை வலி சிகிச்சை
- குழந்தையின்மை சிகிச்சை
- வலியில்லாப் பிரசவம்
- கர்ப்பப்பை கோளாறுகள்
- லேப்ராஸ்கோப்பி சிகிச்சை

இன்சூரன்ஸ் வசதி
மெடி அசிஸ்ட், ஸ்டார் ஹெல்த், பென்சனர் கவர்ன்மென்ட் எம்பிளாயிஸ், குட் ஹெல்த் வசதிகள்



# சிறப்பு சந்திப்பு

மதுரை மாநகராட்சியின் ஆணையர் திருமதி. சித்ரா விஜயன் அவர்களை சேம்பர் குழுவினர் நேரில் சந்தித்து, முதல் பெண் ஆணையராக நியமிக்கப்பட்டதற்கு வாழ்த்து தெரிவித்ததுடன், 2025 பிப்ரவரி மாத இதழை அவரது கரங்களால் வெளியீடு செய்தது. இந்த சந்திப்பில், சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ், பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு, பொருளாளர் திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜி, இதழ் குழு தலைவர் திரு. E.R.K. விக்னேஷ் பாபு மற்றும் செயற்குழு உறுப்பினர் திரு. N.S. பிரேம் குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.





# ஜிஎஸ்டி குறைதீர் கூட்டம்

மாநில வணிக வரித்துறையின் இணை ஆணையராக மதுரைக்கு நியமிக்கப்பட்டுள்ள திருமதி. கீதா பாரதி அவர்களின் தலைமையில் மதுரையில் 13.02.2025 அன்று நடத்தப்பட்ட வணிக வரி குறைதீர்க்கும் கூட்டத்தில் சேம்பர் சார்பாக பொதுச் செயலாளர் ரு. A.B. குமரேஷ் பாபு, செயற்குழு உறுப்பினர் திரு. N.S. பிரேம் குமார், செயற்குழு உறுப்பினர் திரு. T.K. யாகேஸ்வரன் மற்றும் சிறப்பு அழைப்பாளர் திரு. V.R. சேகர் ஆகியோர் கலந்த கொண்டு கோரிக்கை மனுவை அளித்தனர். ஆணையர் அவர்கள், நமது கோரிக்கையை ஏற்று பரிசீலிப்பதாகத் தெரிவித்தார். இதே போல, மறுநாள் 14.02.2024 அன்று மதுரையில் பிரபல தனியார் ஹோட்டல் ஒன்றில் சிஐஐ அமைப்பு நடத்திய எம்எஸ்எம்இ துறைக்கான ஜிஎஸ்டி கூட்டத்திலும் நமது சேம்பர் சார்பாக செயற்குழு உறுப்பினர் திரு. N.S. பிரேம் குமார் அவர்கள் கலந்து கொண்டு சேம்பர் சார்பாக கோரிக்கைகளை வழியுறுத்தினார். கோரிக்கைகள் மறுநாள் நாளிதழில் செய்தியாகவும் வெளியானது.

## சேவைத்தொழிலுக்கான ஜி.எஸ்.டி. உச்சவரம்பை அதிகரிக்க வேண்டும்

### சவுராஷ்டிரா வர்த்தக சங்கம் வலியுறுத்தல்

மதுரை, பிப். 14 – மதுரையில் சவுராஷ்டிரா வர்த்தக சங்கம் நடத்திய வணிகர்களுக்கான குறை தீர் கூட்டத்தில் சேவைத் தொழிலுக்கான ஜி.எஸ்.டி. உச்சவரம்பை அதிரிக்கப் பது உள்ளிட்ட கோரிக் கைகள் தீர்மானமாக நிறை வேற்றப்பட்டன.

வணிகவரி இணை கமிஷனர் கீதாபாரதி பங் கேற்றார். கோரிக்கைகள் குறித்து சங்கத் தலைவர் தினேஷ், முன்னாள் தலை வர் மோகன்ராம், துணைத் தலைவர் குபேந்திரன், பொதுச்செயலாளர் கும ரேஷ்பாபு, பொருளாளர் ராம்லட்சுமணன், இணைச் செயலாளர்கள் சீனிவாசன், சூர்யபிரகாஷ் தெரிவித்தா வது: சேவைத்தொழிலுக் கான ஜி.எஸ்.டி. உச்சவ ரம்பை ரூ.40 லட்சமாகவும் வியாபாரத்திற்கு ரூ.80 லட்சமாக உயர்த்த வேண் டும். . எங்களது உள்ளீட்டு வரி எடுப்பதற்கு ஒன்றரை ஆண்டு மட்டுமே அவகா சம் வழங்கப்பட்டுள்ளது. எனவே வியாபாரிகளுக்கு நோட்டீஸ் கொடுக்கும் காலக்கெடு ஒன்றரை ஆண்டாக குறைக்க வேண்டும்.

ஆறு மாதங்களுக்கு ஒருமுறை தான் ஜி.எஸ். டி., (நோட்டிபிகேஷன்) திருத்தம் செய்ய வேண் டும். லாரி வாடகை ரசீது போன்ற உள்ளீட்டு வரி எடுத்த ஆவணங்களை 8 ஆண்டுகள் பாதுகாக்க வேண்டும் என்ற கட்டுப் பாட்டை தளர்த்த வேண் டும். வியாபாரிகளின் விளக்கங்களை கூறுவதற் கென தனிப்பகுதி ஜி.எஸ். டி., ரிட்டனில் உருவாக்க வேண்டும்.

கட்டுமானத்துறைக் கான வணிகவரி 18 சத வீதம் என்பதை குறைக்க வேண்டும். ஜி.எஸ்.டி. மாற்றம் குறித்து சுற்ற றிக்கை, சட்டங்கள் குறித்த விவரங்களை எல்லா சங் கங்களுக்கும் தெரியப்ப டுத்த வேண்டும் என்றனர்.


# கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டம்

தமிழகத்தில், வணிக சங்கங்கள் இணைந்து கூட்டு நடவடிக்கை குழு ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு முக்கிய பிரச்சனைகளுக்கு, வணிக சங்கங்கள் இணைந்து கூட்டுக்குழுவுடன் செயல்பட்டதன் காரணமாக அரசிடம் இருந்து சாதகமான பலன் கிடைத்திருக்கிறது. இதனை கருத்தில் கொண்டு, வணிகர்கள் மற்றும் தயாரிப்பாளர்களுக்கு ஏற்படும் இன்னல்களை விரைந்து களைவதற்கும், ஒருமித்த கருத்தோடு செயல்படுவதற்கும் வணிக அமைப்புகள் ஒன்றிணைந்து நமது கோரிக்கையை மத்திய மாநில அரசுகளுக்கு தெரிவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, முதல்கட்டமாக சரக்கு மற்றும் சேவை வரியில் உள்ள குறைகளை களைவதற்காக ஒரு கூட்டம் 05.03.2025 அன்று மதுரையில் நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில், அனைத்து வணிக சங்க நிர்வாகிகளும் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தன. அதன்படி நமது சேம்பர் சார்பாக் அரசு தொடர்புக்குழு சேர்மன் திரு. N.S. பிரேம் குமார் அவர்கள் கலந்து கொண்டார். இந்த கூட்டு நடவடிக்கை குழுவிற்கு திரு. R. ஜெயசீலன், விருதுநகர் தொழில் வர்த்தக சங்க செயலாளர் இதயம் திரு. V.R. முத்து ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.



# பிரச்சனைகளும் – கோரிக்கைகளும்

## ஜவுளித் தொழில்துறை



சர்வதேச சந்தை விலையை விட இந்தியாவில் பருத்தி, விஸ்கோஸ், பாலியஸ்டர் உள்ளிட்ட மூலப் பொருட்கள் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது என ஜவுளித் தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் ஆண்டுதோறும் 385 லட்சம் பேல் (ஒரு பேல் 170 கிலோ) பருத்தி உற்பத்தி செய்யப்பட்டு வந்த நிலையில் படிப்படியாக குறைந்து 350 லட்சம் பேல்களாகவும் தற்போது 320 லட்சம் பேல்களாகவும் குறைந்துள்ளது. தவிர சர்வதேச விலையை விட இந்தியாவில் விலை தொடர்ந்து அதிகரித்து காணப்படுகிறது. இன்றைய சூழலில் முதல் தர பருத்தி இந்தியாவில் ஒரு கேண்டி (356 கிலோ) ரூ. 54000 ஆக உள்ளது. ஆனால் சர்வதேச சந்தையில் ரூ. 46 ஆயிரம் மட்டுமே, இன்றைய சூழலில் இந்திய பருத்தி விலை 15 சதவீதம் அதிகமாக உள்ளது.

பருத்தி மட்டுமின்றி விஸ்கோஸ், பாலியஸ்டர் போன்ற செயற்கை இழைகளின் விலையும் சர்வதேச சந்தையை விட இந்தியாவில் ஒரு கிலோ ரூ. 30 வரை அதிகம் உள்ளது. இதனால் சர்வதேச நாடுகளுடன் போட்டியிட முடியாமல் இந்திய ஜவுளி ஏற்றுமதியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு தீர்வு காண, மத்திய அரசு பருத்திக்கு விதிக்கப்படும் 11 சதவிகித இறக்குமதி வரியை நீக்க வேண்டும். தவிர விஸ்கோஸ், பாலியஸ்டர் போன்ற செயற்கை இழை பொருட்களை இந்தியாவில் இறக்குமதி செய்ய விதிக்கப்பட்டுள்ள தரக்கட்டுப்பாடு போன்ற கெடுபிடிகளை உடனடியாக நீக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை மத்திய நிதியமைச்சர் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர், செயலர் உள்ளிட்டோரிடம் ஜவுளித் தொழில்துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தங்க நகை கைவினை தொழில்



சர்வதேச அளவில் தங்கத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், தங்க நகை கைவினைஞர்கள் வருவாய் இழப்பு ஏற்பட்டு தடுமாறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பங்குச்சந்தை முதலீடு செய்து வரும் பெரும் தொழில் அதிபர்கள், சமீபகாலமாக தங்கத்தின் மீது முதலீடு செய்யத் தொடங்கியுள்ளதால் தங்கத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால், தங்க நகை தொழில் செய்து வரும் கைவினைஞர்கள், தொழில் பாதிப்புக்கு உள்ளாகி வருவாய் இழப்பு ஏற்பட்டு வேதனை அடைந்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதத்தில் ஒரு பவுன் தங்கம் ரூ. 58700 என விற்கப்பட்டது. தற்போது ஒரு பவுன் ரூ. 64400க்கு விற்பனையாகிறது. இதுவரை தங்கம் பவுனுக்கு ரூ. 6 ஆயிரம் வரை விலை அதிகரித்துள்ளது.

தங்கத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், வழக்கமாக வரும் ஆர்டர்கள் குறைந்துள்ளது. திருமண விசேஷம், வீட்டு விசேஷ நிகழ்ச்சி என அத்தியாவசிய நகை தேவை உள்ளவர்கள் மட்டுமே தாலி, செயின் உள்ளிட்ட நகை செய்திட தொழில் வாய்ப்பு வழங்கி வருகின்றனர்.

தற்போது பெருமளவு தங்க நகை செய்திட வேலை வாய்ப்பு இல்லாததால், தங்க நகை தொழிலாளர்கள் தொழில் தடுமாற்றத்தால், வருவாய் இன்றி தவித்து வருகின்றனர். எனவே, தொழில் சார்ந்த கடனுதவியை அரசு வழங்க முன்வந்தால், நகை தொழிலாளர்கள் தொழிலை அபிவிருத்தி செய்திடவும், தொழில் பாதிப்பை சமாளிக்கவும் வழி ஏற்படும். அந்தவகையில், தொழில் கடனாக தங்க நகை ஆசாரிகளுக்கு இயந்திரம் வாங்க அல்லது தொழில் கடனாக ரூ. 3 லட்சம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தங்க நகை கைவினைஞர்கள் தொழிலை ஊக்கப்படுத்த வேண்டும் என இத்துறையினர் மாநில அரசுக்கு கோரிக்கை வைக்கின்றனர்.



# Is GST E Way Bill Mandatory For Even 1 KM of Distance?

Goods and services tax was applicable in India from the 1st of July 2017 while there are other provisions including the GST E Way Bill which was applicable from the 1st of April 2018 across the nation.

However, the implementation was done in phases to avoid any further technical glitches. There were 4 phases in which the e-way bill was implemented.

Earlier, there were some queries regarding the distance of an e-way bill and its applicability, and here we have cleared the issues by exact laws detailed by the GST council and finance ministry.

**Here, We have Described the Doubts Regarding the Distance:**

In some cases there are doubts about whether a distance lower than 50 km, is their applicability to generating a GST E Way Bill, here we clear the issues regarding the distance of GST E Way Bill. According to the Eway bill 138, notification – 12/2018, date 07-03-2018, defines supply under GST preface 3 situations:

- Interstate supply – If in case the supply is interstate and the value of the goods is more than 50,000 then a GST E Way Bill is mandatory to generate.
- Supply for further transportation – If in case the supply is intrastate and for further transportation and the transportation office is shorter than 50km then the GST E Way Bill is mandatory to be filled only Part A of the bill.
- Supply to consignee – If intrastate supply is going directly to the consignee if the value of the consignment exceeds Rs. 50,000 while the distance is even within 1 km and transported through the motorized vehicle, it is mandatory to generate GST E Way Bill.

**CBIC Issues Notification Amending E-way Bill Validity to 1 Day for Every 200 km**

The CBIC has issued notification No. 94/2020-Central Tax, dated December 22, 2020, making amendments to Rule 138 of the Central Goods and Services Tax Rules, 2017, under Central Goods and Services Tax Rules (Fourteenth Amendment), 2020.

The new amendments shall be effective from January 1, 2021, in the following manner:

According to the new changes, the validity of the e-way bill has been amended to 1 day for every 200 km of travel, as against 100 km earlier. This is applicable only in cases other than Dimensional Cargo or multimodal shipment where transport by ship is also involved.

In simple words, the e-way bill once created will be valid for 1 day for up to 200 kilometres of travel. For every 200 km. or part thereof thereafter, one additional day will be allowed.

In the case of Over Dimensional Cargo or multimodal shipment in which at least one leg involves transport by ship, the one-day validity of the e-way bill is applicable for up to 20 km of travel. Beyond that, one additional day will be allowed for every 20 km or part thereof.

Refer to the table below for details.

| SL. No. | Distance | Validity Period |
|---|---|---|
| 1. | Upto 200 Km. | One day in cases other than Over Dimensional Cargo or multimodal shipment in whic at least one leg involves transport by ship |
| 2. | For every 200km or part thereof thereafter | One additional day in cases other than Over Dimensional Cargo or multimodal shipment in which at least one leg involves transport by ship |
| 3. | For every 20km | One day in case of Over Dimensional Cargo or multimodal shipment in which at least one leg involves transport by ship |
| 4. | For every 20km. or part thereof thereafter | One additional day in case of Over Dimensional Cargo or multimodal shipment in which at least one leg involves transport by ship |

## Various GST Registrations Are at the Same Address. Is it Permissible or not?

The issue of whether multiple companies can register for GST at the same address was clarified in the case of In Re: M/s Spacelance Office Solutions Pvt Ltd (2019 TAXSCAN (AAR) 127). The applicant, who is in leasing co-working spaces, asked for clarification on whether different businesses operating from a shared address could each get a distinct GST registration.

It was ruled by the Kerala Authority for Advance Ruling that various GST registrations at the **same address are allowable**, given that each entity has a varied identification, like a dedicated desk or cabin number.



# புதுமையான ஐடியா இருந்தாலே போதும்...

## சிறந்த ஸ்டார்ட் அப் நிறுவனமாக மாற முடியும் என்கிறது StartupTN

ஸ்டார்ட் அப் தமிழ்நாடு திட்டம் 2021ம் ஆண்டு மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்டது. அதன் பிறகு 2022ம் ஆண்டு முழுமையாக செயல்படத் தொடங்கியது.

சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டும் இல்லாமல் சிறிய நகரங்களிலும் ஸ்டார்ட் அப் தொழில்களின் வளர்ச்சி அதிகமாக உள்ளன. 2020ம் ஆண்டு தமிழகத்தில் 2000 ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மட்டுமே இருந்த நிலையில், தற்போது 9000 ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உள்ளன. இந்த வளர்ச்சி எப்படி சாத்தியமானது?. ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு ஸ்டார்ட் அப் நிறுவனம் எப்படியெல்லாம் உதவுகிறது என்பது குறித்து அதன் திட்ட இயக்குநர் சிவராஜா ராமநாதன் அவர்கள் முன்னணி ஊடகத்திற்கு அவர் அளித்த பிரத்யேக பேட்டியினை நமது சேம்பர் அங்கத்தினர்கள் பயனுக்காக லாப் ஸமாச்சார் இதழின் வாயிலாக வெளிடுகிறோம்.

**தற்போது புதிதாக உருவாகும் நிறுவனங்கள் அனைத்துமே ஸ்டார்ட் அப் நிறுவனங்களா அல்லது சொந்தமாக பிசினஸ் செய்பவர்களா? இவர்களை எப்படி அடையாளம் கண்டு உதவி செய்கிறீர்கள்?...**

இது முக்கிய பிரச்னையாக உள்ளது. ஸ்டார்ட் அப் என்பதற்கு பலவிதமான புரிதல்கள் உள்ளன. புதிதாக தொடங்குவது அனைத்தும் ஸ்டார்ட் அப் கிடையாது. டெக்னாலஜியுடன் இணைந்து புதுமைகளை உருவாக்குவதே ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் ஆகும். அதாவது இண்டர்நெட் வந்த பிறகு அமெரிக்காவில் டாட் காம் நிறுவனங்கள் அதிக அளவில் தொடங்கப்பட்டன. இதை ஸ்டார்ட் அப் நிறுவனம் என வகைப்படுத்தினர். அதேபோல புதுமையுடன் வரும் தொழில்கள், ஸ்டார்ட் அப் நிறுவனங்களாக மாறுகின்றன.

உதாரணமாக, உணவு டெலிவரி செய்யும் நிறுவனங்கள் தற்போது அதிகமாக உள்ளன. இந்த நிறுவனங்களின் தொழிலே, வாடிக்கையாளர்கள் இருக்கும் இடத்தில் ஹோட்டல் உணவை டெலிவரி செய்வதுதான். ஆனால் இந்த நிறுவனங்கள் அதை ஒரு தொழில்நுட்பத்துடன் இணைத்து ஹோட்டலின் பெயர், அங்குள்ள உணவு வகைகள், அந்த உணவு எவ்வளவு நேரத்தில் டெலிவரியாகும், அதற்கான கட்டணம் என்ன, யார் அந்த உணவை டெலிவரி செய்கிறார்கள் என அனைத்து தகவல்களையும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் அவர்களின் ஆப்-ஐ வடிவமைத்துள்ளனர். இதனால் வாடிக்கையாளர்கள் மிக எளிதாக இருந்த இடத்தில் இருந்தே உணவை ஆர்டர் செய்து சாப்பிட முடியும். அதவாது புதுமையுடன் விரைவில் வளரக்கூடிய நிறுவனங்களே ஸ்டார்ட் அப் நிறுவனம் எனப்படுகிறது.



**சிறுநகரங்களில் இருந்து உருவாகும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு, ஸ்டார்ட் அப் தமிழ்நாடு அமைப்பு எந்த மாதிரியான உதவிகளை செய்கிறது?.**

2 அடுக்கு, 3ம் அடுக்கு நகரங்களில் இருந்து வரும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குகிறோம். அதாவது ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் நிதி திரட்டுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது தொடங்கி அனைத்து விதமான உதவிகளுமே இங்கு வழங்கப்படுகின்றன. மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையிலான ஸ்டார்ட் அப் ஐடியாவுடன் வருபவர்களுக்கு,அதை எப்படியெல்லாம் மேம்படுத்தி, நிறுவனமாக பதிவு செய்ய வேண்டும், அதற்கு குறைந்த கட்டணத்தில் எங்கு சேவை கிடைக்கும், அந்த ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மெஷின் டிசைன் செய்ய வேண்டுமெனில் அதற்கான உதவிகள் என அனைத்து வகையான ஆலோசனைகளையும் நாங்கள் வழங்குகிறோம். ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கான ஈகோ சிஸ்டத்தை நாங்கள் உருவாக்கித் தருகிறோம்.

**ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு மத்திய, மாநில அரசுகள் நிதி வழங்கு திட்டங்கள் எவை, அதை எப்படி பயன்படுத்த முடியும்?**

பல திட்டங்களின் கீழ் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு நிதி வழங்கப்படுகிறது. அதாவது ஐடியா மட்டும் இருக்கிறது, அதை டெவலப் செய்வதற்கு உதவிகள் தேவை என கூறுபவர்களுக்கு இன்குபேஷன் சென்டர் மூலமாக வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறோம். மேலும் மத்திய மாநில அரசுகள் வழங்கும் கிராண்டை பெறுவதற்கான வழிமுறைகளில் அவர்களுக்கு தேவையான உதவிகளை எங்களின் டீம் செய்து கொடுக்கிறது.அதன்பிறகு நிறுவனங்களுக்கான நிதி உதவிகளை வழங்குகிறோம்.

ஆரம்பகட்டத்தில் இருக்கும் நிறுவனங்களுக்கான நிதியை Entrepreneurship Development Institute of India மூலமாக வழங்குகிறோம். இதில் ரூ. 2 லட்சம் முதல் ரூ. 5 லட்சம் வரை நிதி கிடைக்கும். அடுத்ததாக ஸ்டார்ட் அப் தமிழ்நாட்டில் இருந்து TANSEED திட்டத்தின் மூலமாக ரூ. 10 லட்சம் வரையும், 75 சதவிகிதத்துக்கு மேல் பெண்களால் இயங்கும் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், சுற்றுச்சூழல் தொடர்பாக இயங்கும் நிறவனங்கள் உள்ளிட்ட சில நிறுவனங்களுக்கு மட்டும் ரூ. 15 லட்சம் வரையும் நிதி வழங்குகிறோம். இதுமட்டும் இல்லாமல் எஸ்.சி., எஸ்.டி., பிரிவைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு அதிகபட்சமாக ரூ. 5 கோடி வரை

வழங்கப்படுகிறது. மேலும் செபியின் அனுமதி பெற்ற Tamilnadu Infrastructure Fund Management Corporation மூலமாகவும், புதிய டெக்னாலஜிஸ் நிறுவனங்களுக்கு நிதி வழங்கப்படுகிறது.

**ஸ்டார்ட் அப் நிறுவனங்களை பெரும் சிக்கலாக நினைப்பது மார்க்கெட்டிங் மற்றும் விற்பனை. இதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகிறதா?**

ஸ்டார்ட் அப் நிறுவனம் என்பதே புதுமையான ஐடியா என்பது தான். இந்த புதுமை சந்தை ஏற்று கொள்ளுமா? சந்தைக்கு ஏற்பட அதை எப்படி வடிவமைப்பது உள்ளடக்கத்தை அந்த துறையில் வல்லுநர்கள் உள்ளவர்களின் வழிகாட்டுதல் அவசியம் ஆகிறது. இதற்கு ஸ்டார்ட் அப் தமிழ்நாடு தனியாக ஒரு போர்ட்டலை உருவாக்கியுள்ளது. விற்பனை மற்றும் மார்க்கெட்டிங் மட்டும் இல்லாமல் ஒவ்வொரு துறைக்கும் வழிகாட்டுதல்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 300 வழிகாட்டு நிபுணர்களை ஒருங்கிணைத்துள்ளோம். இவர்கள் ஒவ்வொருவரும் அந்தந்த துறைகளில் 10 முதல் 12 ஆண்டுகள் வரை அனுபவமும், சிறந்த அணுகுமுறையையும் கொண்டவர்கள். இதுமட்டும் இல்லாமல் கால் சென்டர் மூலமாகவும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு தேவையான உதவிகளை செய்து தருகிறோம்.

ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் வழங்கும் சேவை, தயாரிப்புகள் அரசின் பலதுறைகளுக்கு தேவைப்படலாம். அங்கு விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளையும் நாங்கள் செய்து தருகிறோம். இதை S2G என்கிறோம். இதனால் ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் விற்பனை அதிகரிக்கும். மேலும் பல இடங்களில் கண்காட்சிகளையும் தொடர்ந்து நடத்தி வருகிறோம். துபாய், சிங்கப்பூர் மற்றும் அமெரிக்காவில் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் அவர்களின் தொழிலை விரிவுபடுத்த சப்போர்ட் சிஸ்டத்தை உருவாக்கி உள்ளோம். மேலும் டிஜிட்டல் மார்க்கெட்டிங், சட்ட நடைமுறை, சர்வர் என பல தேவைகள் இருக்கும். இதற்கு குறைந்த விலை சேவை வழங்கும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து, அந்த சேவை பெறுவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம். இதற்காக ஸ்மார்ட் கார்ட் திட்டம் ஒன்றையும் வைத்துள்ளோம்.

**ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் ஹப் ஆக பெங்களூரு உள்ளது. தமிழ்நாடு எப்போது அப்படி உருவாகும். அதற்கான பணிகளை நாம் மேற்கொண்டு வருகிறோமா?.**

மும்பை, டெல்லி, பெங்களூரு நகரங்கள் இயற்கையாகவே சில முக்கியத்துவம் வாய்ந்த நகரங்கள் ஆகும். பெங்களூரு 35 வருடங்களுக்கு மேல் பல ஐடி நிறுவனங்கள் உள்ள நகரமாக உள்ளன. ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் பெரும்பாலும் டெக் துறையை அடிப்படையாக கொண்டு இயங்குவதால், அங்கு Venture Fund திரட்டுவதும் எளிதாக உள்ளது. இதனால் அதிக ஸ்டார்ட் அப்-கள் உருவாகி உள்ளன.

இதே போல் மும்பை என்பது பிசினஸ் கேப்பிடலாக உள்ளது. அங்கு செபி, பங்குச்சந்தை என பல வர்த்தக மையங்கள் உள்ளன. எனவே நிறுவனங்களுக்கான பதிவு அங்கு எளிதாக இருக்கும் என பலரும் நினைக்கின்றனர். மேலும் டெல்லியும் அப்படித்தான் பல சிறப்புகளை கொண்டுள்ளது. இதனால் இந்த இடங்களில் அதிக ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உள்ளன.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழகத்தில் முதலீட்டாளர்களை கொண்டுவருவதற்கான வேலைகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.ஒவ்வொரு முறையும் முதலீட்டாளர்களை சென்னைக்கு வரவழைத்து, ஸ்டார்ட் அப் நிறுவனங்களுடன் இணைக்கிறோம். இதன் மூலமாக புதிதாக ஸ்டார்ட் நிறுவனங்கள் தொடங்குவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

**சென்னையில் மட்டும்தான் அதிக அளவில் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உள்ளன. தமிழகத்தில் பிற மாவட்டங்களில் ஸ்டார்ட்அப் வளர்ச்சி எப்படி உள்ளது?**

வளர்ச்சி என்பது ஒரு இடத்தில் மட்டும் இருக்கக் கூடாது என்பதில் தெளிவாக உள்ளோம். அது அனைவருக்குமானதாக இருக்க வேண்டும். 2021ம் ஆண்டில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கை சென்னையிலிருந்து 70 சதவிகிதமும், கோவையில் 12 சதவிகிதமும் இருந்தன. மீதமுள்ள 18 சதவிகிதம் தமிழகம் முழுவதும் இருந்தது. அதுவே 2024ம் ஆண்டில் சென்னையில் உள்ள 53 சதவிகித ஸ்டார்ட் நிறுவனம், மீதமுள்ள மாவட்டங்களில் 47 சதவிகித ஸ்டார்ட் அப் நிறுவனங்களும் இருந்தன.

வரும் 2028ம் ஆண்டுக்குள் தமிழகத்தில் 15000 ஸ்டார்ட் அப் நிறுவனங்களை உருவாக்க வேண்டுமென இலக்கு வைத்து ஸ்டார்ட் அப் தமிழ்நாடு இயங்கி வருவதாக இயக்குநர் சிவராஜா அவர்கள் தெரிவிக்கிறார்.

மக்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், அவர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கும் வகையிலான ஐடியா மட்டுமே இருந்தால், அசத்தலாக ஸ்டார்ட் நிறுவனத்தை தொடங்கி ஜெயிக்கலாம்.

- The Economic Times

Sowndarya Traders

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# தமிழக ஆளுநர் சந்திப்பு

## ஒரு பார்வை



திருவாரூரில் அமைந்துள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் ஸௌராஷ்ட்ர மொழி மற்றும் கலாச்சார வளர்ச்சிக்கு மதுரையில் சிறப்பு மையத்தை (சி.எஸ்.எல்.சி) அமைக்க இந்திய அரசின் கல்வி அமைச்சருக்கு மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்களின் பரிந்துரையைக் கோரி திரு. நாகேஸ்வரன் சோமி அவர்களின் தலைமையிலான சௌராஷ்ட்ர பிரதிநிதிகள் 11 பேர் கடந்த பிப்ரவரி மாதம் 11ம் தேதி சென்னை ராஜ்பவனில் மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்களைச் சந்தித்தனர்.

இந்த சந்திப்பில், ஆளுநர் ரவி அவர்கள், பரிந்துரைக்கான காரணத்தைக் கேட்டறிந்தார். திரு. நாகேஸ்வரன் சோமி அவர்கள், குஜராத் ராஜ்கோட்-ல் உள்ள சௌராஷ்ட்ர பல்கலைக்கழகத்தில் ஸௌராஷ்ட்ர மொழிக்கென ஒரு தனி அமர்வு அப்போதைய மாண்புமிகு குஜராத் முதல்வராக இருந்த பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் மதுரை விஜயத்திற்குப் பிறகு உருவானதையும், 2023ம் ஆண்டு நடைபெற்ற சௌராஷ்ட்ர தமிழ் சங்கமத்தில் பிரதமர் அவர்களின் உரையில், ஏக் பாரத்; ஸ்ரேஷ்ட பாரத் என்ற கோட்பாட்டின் அடிப்படையில், பிரதமரின் தொலைநோக்குப் பார்வைக்கு வடிவம் தரும் வகையில் 9 கோடி மூலதனச் செலவில் 15 ஆயிரம் சதுர அடிக்கு மேல் மதுரை நகரில் சிஎஸ்எல்சி(CSLC) மையத்தை நிறுவ கோரப்பட்டுள்ளதை விளக்கினார். அதில், நூலகம், அருங்காட்சியகம், ஆசிரியர் பயிற்சி / கற்றல், ஆராய்ச்சி மையம் மற்றும் கலாச்சார தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். நாட்டின் பிற மாநிலங்களில் உள்ள சிறுபான்மை மொழிகளுக்கு இதுபோன்ற சிஎஸ்எல்சி மையம் மத்திய பல்கலைக்கழகங்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளதைத் தெரிவித்தார்.

சௌராஷ்ட்ர மொழி, ஒரு அங்கீகரிக்கப்பட்ட சிறுபான்மை மொழியாக தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. G.O. Ms No. 2 Dt. 07.01.2021-ன் படி ஸௌராஷ்ட்ர மொழி, தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் வாரத்திற்கு 4 வகுப்புகள் சிறுபான்மை மொழியை ஒரு பாடமாக கற்பிக்கப்படுவதற்கு தகுதியுடையது என்றும் தெரிவித்தார். ஆளுநர் அவர்கள் இதனை வரவேற்று, மொழிவழி சிறுபான்மை மொழிகள் வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மீது கவனம் செலுத்தி, அதன் பலனை திறம்பட பயன்படுத்த தெலுங்கு மற்றும் பிற மொழி அமைப்புகளுடன் ஆலோசனை நடத்தி செயல்பட நமது பிரதிநிதிகளை அறிவுறுத்தினார்.

சிஎஸ்எல்சி பிரதிநிதிக்குழு, கடந்த 2024 டிசம்பர் 24ம் தேதி, திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரைச் சந்தித்து இது பற்றி பேசியதைத் தெரிவித்தார். அவர், இந்திய அரசாங்கத்தின் ஒப்புதல் கிடைத்தால் மத்திய பல்கலைக்கழகம் சி.எஸ்.எல்.சி மையம் அமைக்க தயாராக இருப்பதாக தெரிவித்திருந்ததை கூறினார்.

அதற்காக, முதலில், மத்திய அரசின், கல்வித்துறை அமைச்சரின் ஒப்புதலைப் பெற, நாகாலாந்து ஆளுநர் திரு. இல. கணேசன் அவர்களை ஜனவரி 20, 2025 அன்று சந்தித்து பரிந்துரை செய்யக் கோரி தெரிவித்ததையும், அதற்கு அவர் கடிதம் அனுப்புவதாக உறுதியளித்துள்ளார் என்பதையும் ஆளுநர் அவர்களிடம் திரு. சோமி. நாகேஸ்வரன் அவர்கள் தெரிவித்தார்.

11 பிரதிநிதிகள், ஆளுநர் அவர்களுக்கு தங்கள் அமைப்பின் சார்பாக பரிசுகளையும், அமைப்பின் செயல்பாடுகள் பற்றியும் சுருக்கமாக விவரித்தனர்.மேலும், ஸௌராஷ்ட்ர சமூக மக்களின் இடப்பெயர்ச்சி, தற்போதைய வளர்ச்சி போன்றவைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

ஆயிரம் ஆண்டுகளாக மொழியையும் கலாச்சாரத்தையும் உயிர்ப்புடன் வைத்திருந்ததற்காக ஸௌராஷ்ட்ரர்களை ஆளுநர் அவர்கள் பாராட்டினார். இந்த சிஎஸ்எல்சி-ஐ அமைப்பதற்காக பரிந்துரை கடிதத்தை இந்திய அரசின் கல்வி அமைச்சருக்கு நிச்சயம் அனுப்பப்படும் என்று ஆளுநர் அவர்கள் உறுதியளித்தார்.

ஆளுநருடனான இந்த சந்திப்பு மிக இனிமையாக அமைந்தது.. ஆளுநர் அவர்கள், நமது கருத்துக்களையும், கோரிக்கையையும் மிகவும் கவனத்துடன் கேட்டுக்கொண்டார். எங்களின் இந்த முயற்சிக்கு நிச்சயம் பலன் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

இந்த சிஎஸ்எல்சி மையத்தை உருவாக்க 27 சமூக அமைப்புகளும், சமூக முக்கிய பிரமுகர்களும் இணைந்து இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



# தொல்லையில்லா தொழிலியல்

**Acquiring Information (AI)**

– வீரஜா

மார்ச் மாதம் வந்துவிட்டாலே பரபரப்புக்குப் பஞ்சமிருக்காது. மாணவச் செல்வங்களின் பரீட்சையில் தொடங்கி, தொழில் முனைவோரின் நிதி–ஆண்டு நிறைவு என தொடர்ந்து, தனியார் துறை, வங்கி, காப்பீடு போன்ற நிறுவனங்களின் இலக்கினை (Target) அடைய மேற்கொள்ளப்படும் முழுமுயற்சி என்று அனைத்து வர்க்கத்தினரும், திணறும் வகையில் காலில் சக்கரம் கட்டிக் கொண்டு பணிபுரியும் காலகட்டம் இது எனலாம்.

இவை ஒருபுறமிருக்க, ஜிஎஸ்டி, வருமானவரி போன்றவற்றிற்கு இறுதிவடிவம் கொடுக்க வேண்டிய தருணமும் இது என்பது கூடுதல் சுமை. சங்கிலித் தொடரென, கணக்குவழக்குகளில், மற்றவர்கள் நம்மையும், நாம் மற்றவர்களையும் சார்ந்து இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

பதினோறு மாதங்கள் வரை கவனிக்க நேரம் இல்லாமல், அனைத்தையும் மார்ச் மாதத்திற்குத் தள்ளிப்போடும் பழக்கமுடையவர்களின் முன்னேற்றம் தள்ளித்தான் போகும் என்பது அனுபவக்கூற்று. கல்விகற்கும் பருவத்திலேயே, **காலத்தே பயிர் செய்** என்பதை பழக்கப்படுத்திக் கொண்டவர்களுக்கு அனைத்தும் சாதகமாக அமையும். அப்போது முயற்சி எடுக்காதவர்கள், இப்போதாவது பின்பற்றத் துவங்கினால் தொட்டது துலங்கும்.

குடும்பத்தில் போதிய அக்கறை இல்லாமல் தொழிலில் அதீத கவனம், உடலையும், மனதையும் கெடுக்கும் பொழுது போக்கில் நாட்டம், இவை இரண்டும் இருதலைக் கொல்லிகள், தொழில்துறையினரின் எதிரிகள்.

காலாண்டு, அரையாண்டு என்று மூன்று மாதத்திற்கு ஒருமுறை எல்லாவற்றிலும் தீவிர மதிப்பாய்வு (Review) செய்து வந்தால், தொழிலில் மதிப்புமிக்க இடத்தை அடையலாம். பிரதி மாதம் மதிப்பாய்வு செய்வது, உச்சம் தொட்டவர்களின் அடையாளம். தினந்தோறும் அதனைப் பராமரிப்பவர்கள் உதாரண புருஷர்கள்.

தொழிலில் நாம் இப்போது எந்த இடத்தில் இருக்கிறோம்? நாம் செல்லும் திசை சரிதானா? இன்னும் கடக்க வேண்டிய தூரம் எவ்வளவு? அதனை அடைய முயற்சிகள் போதுமானதா? அல்லது ஏதாவது மாற்று யோசனை செய்தாக வேண்டுமா? போட்டியாளர்களைச் சமாளிப்பது எப்படி? வாடிக்கையாளர்களை தக்கவைத்துக்கொள்வதுடன் புதியவர்களைப் பெறுவதில் வழிமுறைகள் என்னென்ன? செலவினங்களைக் குறைக்கும் யுக்திகள் யாவை? பொருட்களின் / சேவைகளின் தரம் மேம்பட வழிவகைகள் எவை? பணியாளர்களின் மனநிலை, சூழ்நிலை திருப்திகரமாக இருக்கின்றனவா? இவைகளை ஆத்ம பரிசோதனைக்கு உட்படுத்தி, கிடைக்கும் விடைகள், பத்துக் கட்டளைகளுடன் (Ten Commandments) ஒப்பிடலாம்.

Treadmill–ல் ஓடிக்கொண்டே இருந்தாலும், நாம் அதே இடத்தில்தான் இருப்போம். அதுபோன்றதே இன்றைய தொழில் புரியும் நிலைமை என்பது பலருக்கும் புரியும். ஆக்கப்பூர்வமாக செயல்பட்டுக்கொண்டே இருந்தால் தான் இருக்கும் இடத்தில் தொடர முடியும். இடறிவிழும் துரதிஷ்டமான சம்பவங்களும், பின்நோக்கித் தள்ளப்படும் அபாயமும், தொழில்துறையில் நம்மைத் தவிக்கவிடும், தவிர்க்கப்படவேண்டியவை. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் கவனம் இருந்தால், இதுபோன்ற அடிகளிலிருந்து சுலபமாக தப்பித்து விட முடியும்.

புத்தகங்களை வாசித்தல், குறிப்பாக துறை சம்பந்தமான கட்டுரைகளை சுவாசித்தல், தொழில் மேலாண்மைக்காக நடத்தப்படும் கூட்டங்களில் பங்கேற்றல் போன்றவைகளைத் தங்களது கால அட்டவணையில் சேர்த்துக்கொண்டால், வியாபார வளர்ச்சி காலங்காலமாக தழைத்தோங்கும். இவற்றை மேற்கொள்பவர்களுக்கு நிதி ஆண்டு முடிவு என்பது ஒரு சம்பவம் தான். ஏனென்றால், இவர்கள் சரித்திரம் படைக்கத் தோன்றியவர்கள்.

வரும் புதிய நிதியாண்டிலிருந்து, தற்போது trend-ல் இருக்கும் Artificial Intelligence (AI)-ஐ உபயோகிப்பதுடன் Acquiring Information (AI) எனப்படும் தகவல் சேகரித்தல் மற்றும் பரிமாற்றம் என்கின்ற உன்னதப் பண்பைக் கடைப்பிடித்து தொழில்துறையினர் வெற்றியடைய வாழ்த்துக்கள்.



**Statement about Ownership and other particulars of LAABH SAMACHAR, (Monthly) Madurai as required under rule 8 of the Registration of Newspapers(central) Rules, 1956 Form IV (See Rule 8)**

| | | |
|---|---|---|
| Place of Publication | - | Madurai |
| Periodicity of its Puclication | - | Monthly |
| Printer's Name | - | K.R. Ramalingam |
| Nationality | - | Indian |
| Address | - | No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 1, Tamilnadu. |
| Publisher's Name | - | K.K. Gnana Prabhakaran |
| Nationality | - | Indian |
| Address | - | 5A, Pankajam Colony 3rd Cross Street, Madurai Tamilnadu. |
| Name and Address of Publication of own the newspaper & Partners or share holders holding more than one percent of the total capital. | - | Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, II Floor, Madurai - 1. Tamilnadu. |

I, K.K. Gnana Prabhakaran, hereby declare that the particulars give above are true to the best of my knowledge and belief.

Date: 01.03.2025

K.K. Gnana Prabhakaran
Publisher & Editor


APPOLO SALES & SERVICE
அப்போலோ
மோட்டார் & பம்ப்ஸ்
Mfrs : SRI KARTHICK PUMPS, MADURAI - 625 009. GSTIN : 33CALPK9113M1ZE
YOUR TRUSTED BRAND IN JET PUMPS SOURASHTRIAN PRODUCT
32B, குருவிக்காரன் சாலை,
கணேஷ் தியேட்டர் பாலம் அருகில், மதுரை - 625 009.
98428 14725
பழைய மோட்டார்
EXCHANGE
செய்யப்படும்
கம்பரசர் மோட்டார்
ரூ12,500 முதல்
மோனோபிளாக் மோட்டார்
ரூ 6500 முதல்
ஓபன்வெல் மோட்டார்
ரூ 5500 முதல்
சப்மெர்சிபள் பம்ப்
(காப்பர் ரோட்டர்)
ரூ 7500 முதல்





Available for
**Lease Rent**

**Owner Name:**
M.K. Kaladhar Babu
Managing Director
Pandian Printpacks and Textile Mills Pvt. Ltd.,
Kappalur, Madurai - 625008

**GST No.:** 33AABCP0789M1Z4

**SIDCO Address:**
Shed No. 22A, SIDCO Industrial Estate, Kappalur, Thirumangalam Taluk, Palakkapudupatti Village, Madurai - 625008.

**Building Area:**
61.5' * 42.5' (2615 Sq.ft) with Galvanised (JSW) sheet roofed buildings

**Shed No.:** 5

**EB Power:** 104.8HP/105KW

Available for immidiate occupation.

**Contact Nos.**
99944 35350
99944 98090



நூருண்டு கால பட்டு பாரம்பரியம்
SRB SILKS HOUSE
145,East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633

SRB FINSERVE PVT.LTD.
B1, Sivagangai Road, Managiri,K.K.Nagar,Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702

SRB RETAIL LLC.
503, Gracelyn Way Lewis Center,
COLUMBUS, OHIO,43035.
Ph : +1 952 290 6405

SRB MULTI PURPOSE HALL
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar,Madurai.
Cell : 89039 29247

100 YEARS SRB

EXPRESS BRIYANI
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300

KEESHTU BOLI & SNACKS
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000

SRB CATERING
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500

SWASI NATURO CURE HOSPITAL
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூஸா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952

S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL
S.R.B.ARUNLAL



ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
Cell: 90805 54802, 99424 90217
**Prof. Dr. M.V. SUBBURAMAN**
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga),
M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)
Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University
(Retd. HOD of Hindi, The American College, Madurai).
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M





4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

*With best compliments from*

## Kfam Group of Companies

## Pandian Surfactants Private Limited

Manufacturers Representative for



**K.K.Dinakaran**
Chairman & Director

Godrej — Chemical Division

IFF — Perfumes & Fragranaces

INDORAMA — Speciality Chemicals

## Kfam Micro Products Private Limited

Manufacturers of Speciality Chemicals & Consumer Products

Micro Sol — Perfect Cleaning for Future Life



## Kfam Micro Polymers

Manufacturers of Blow Moulding & Injection Moulding Products






Regd. Office : **Pandian Surfactants Private Limited**

**Shed No.57/62, (NP) Sector 1, 3rd Street, Ambattur Industrial Estate,**
**SIDCO Industrial Estate, Pattaravakkam, CHENNAI-600 098.**
**Email : dinakaran@pfpl.in Kishan@pfpl.in www.pandiansurfactants.com**

| Branches | Chennai | Madurai | Hyderabad | Bangalore |
|---|---|---|---|---|

# நவீன மருத்துவமும் நம்பிக்கையும்

நாம் நாற்பது வயதை கடந்து விட்டாலே இரத்த ஓட்டம் குறையும். சர்க்கரை நோய் போன்ற பாதிப்பு மேலும் மூட்டு வலி, தோள்பட்டை வலி வந்துவிடுகிறது. நம் நாட்டில் 40 வயதை கடந்து விட்டாலே 7-ல் ஒருவருக்கு தோள்பட்டை வலி 3ல் ஒருவருக்கு முழுங்கால் வலி உள்ளது. மூட்டின் நீர் சுரப்பிகளில் புண் ஏற்பட்டு வலி வந்து விடுகிறது. இது ஆரம்ப காலத்தில் கண்டறியப்பட்டால் மருந்து மற்றும் பிசியோதெரபி மூலம் குணமாக்கலாம். தொடர்ந்து வலி இருந்தால் அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். சிலருக்கு தோள்பட்டை எலும்பு இயற்கையாகவே வளைந்து இருக்கலாம். இதன் காரணமாக தீராத வழி இருக்கலாம். அதை சரி செய்ய மருந்து இல்லை. அறுவை சிகிச்சை முறை தான்.

தற்போது வளர்ந்த தொழில் நுட்பம் மூலம் அறுவை சிகிச்சையை திறக்காமலேயே செய்ய முடியும். தற்சமயம் அதிநவீன நுண்துளை சிகிச்சை மூலம் சிறிய துவாரம் அல்லது சிறிதாக திறந்து அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. மூட்டுகளில் எந்த இடத்திலும் பிரச்சனைகள் இருந்தால் கேமிரா மூலம் தெளிவாக கண்டறிந்து சிறப்பான சிகிச்சை செய்யலாம். ஒரே நாளில் சிகிச்சை முடித்து வீடு திரும்பலாம். ஓரிரு வாரத்தில் வழக்கமான பணிகளை தொடரலாம். வலியும் மிகக்குறைவு. அறுவை சிகிச்சை என்றாலே அதிக வலி இருக்கும் என்னும் எண்ணத்திற்கு பெரிய முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. மேலும் விபத்துக்களில் தோள்பட்டை விலகி சிகிச்சை பெற்று விலகாமல் இருக்க நுண்துளை சிகிச்சை முக்கிய பங்கு வகிக்கிறது.

இதே போல முழங்கால் மூட்டில் அடிபட்டு நேராக நடக்கும் போதும், திரும்பும் போதும், கீழே விழுவது போல் உணர்வு ஏற்பட்டால் மூட்டில் உள்ள இணைப்பு ஜவ்வு அறுந்து இருக்கலாம். இவ்வாறு உள்ளவர்களுக்கு மூட்டில் தேய்மானம் அதிகமாக ஏற்பட வாய்ப்பு உண்டு. இவர்களுக்கு திறந்தவெளி சிகிச்சை செய்யும் அவசியம் இல்லை. எளிதாக மூட்டு நுண்துளை சிகிச்சையில் நன்றாக குணமாக்க முடியும்.

மிக மோசமாக மூட்டு தேய்மானம் உள்ளவர்களுக்கு மட்டும் மூட்டு மாற்று சிகிச்சை மேற்கொண்டால் போதும். ஆரம்ப கட்டத்தில் உள்ளவர்கள் மருந்து வகைகளிலும் நவீன பிசியோதெரபி முறையில் குணமடையலம்.

தற்போது இயற்கையாகவே ஜவ்வை வளர வைக்க வேண்டும் ... என்பதற்காக ஆய்வை மேற்கொண்டு வருகிறேன். நோயாளிகள் வலி இல்லாமல் சிகிச்சை முடிந்து செல்ல வேண்டும். நுண்துளை சிகிச்சை நிபுணர்கள் நம் நாட்டில் குறைவு. போதிய வசதிகள் உள்ள மருத்துவமனைகள் குறைவு. இதனால் நம் மக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லாமல் உள்ளது. இதே போன்று மூட்டு மாற்று சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு மிக நவீன தொழில் நுட்பம் மேற்கொண்டு பல வருடங்கள் மூட்டு வலியே இல்லாமல் இருக்கலாம் என்ற விழிப்புணர்வு மக்களிடம் குறைவாகவே உள்ளது.

என் 30 வருட வாழ்க்கை அனுபவத்தில் 10000-க்கு மேல் அறுவை சிகிச்சை செய்துள்ளேன. தினசரி 80 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கிறேன். என்னை பார்க்க துயரத்தில் வந்தவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கணக்கு. அதே போல மகிழ்ச்சியாக வீடு திரும்பியவர்கள் பல மடங்கு. நவீன மருத்துவம் நோய்க்கு சிகிச்சை அளித்தாலும் மனதில் குணமாகும் என்ற நம்பிக்கை மனதிற்கு மிக உற்சாகம் அளித்து விடும். இதை ஒரு உதாரணத்துடன். கூறுகிறேன்.

சாலை விபத்தில் காயம் அடைந்த நபர் ஒருவர் வருகிறார். அவருக்கு தொடை எலும்பு மற்றும் கால் எலும்பு முறிவடைந்துள்ளது. வலியில் துடித்துக் கொண்டு இருக்கிறார்கள். அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. அவர் குணமாகி வீடு திரும்புகிறார். அவரிடம் என்னுடைய தினசரி மேற்பார்வை பரிசோதனையில் நான் கேட்ட ஒரு கேள்விக்கு அவர் கொடுத்த பதில் எல்லோரையும் வியக்கவைக்கும்.

நான் சாலை விபத்து அடைந்து நான் முதலில் உங்களை சந்தித்த போது நீங்கள் கூறிய வார்த்தைகள் எனக்கு நம்பிக்கை கொடுத்து விட்டது. நன்றாக சிகிச்சை அளிக்கப்பட்டதும் குணமாக்கும் என்ற நம்பிக்கையே மன நிறைவை தருகிறது.

அறுவை சிகிச்சையில் வலி இருக்கும் ஆனால் வலியை உணர்வதோ உடல் தான். இவ்வாறு இருக்கையில் மனம் திடமாக நம்பிக்கையுடன் இருந்தால் எந்த நோய்க்கும் எதிர்கொள்ளும் துணிச்சல் வரும். மேலும் நோயில் இருந்து எளிதில் மீள முடியும்.

இத்துடன் நான் கூற விரும்புவது அனைவரும் ஆரோக்கியமாக இருக்க அதி நவீன சிகிச்சை உள்ளது என்ற விழிப்புணர்வு வேண்டும். மேலும் நோய் இல்லாமல் வாழ பழக வேண்டும். அதை விட முக்கியமாக அனைத்தும் சரியாகி விடும் என்ற நம்பிக்கை வேண்டும். எல்லோரும் நலமாக வாழ வேண்டும். மகிழ்வுடன் வாழ்க்கை வாழ வேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்தனை செய்து இந்த பதிலை முடித்துக்கொள்கிறேன்.

– மரு. கே.என். சுப்பிரமணியன்,
வேல் மருத்துவமனை & வேல் சிறப்பு எழும்பியல் மையம்




# என்ன எப்படி எங்கு: பேச வேண்டும்!

"பல் போனால்  சொல் போச்சு" என்பார்கள், சொல் போனால் வாழ்க்கையே மாறிவிடும். வார்த்தை என்பது வெறும் சத்தம் அல்ல, ஆற்றல். "பிழைபடப் பேசேல்" என்ற அவ்வையின் வரிகளின் படி வார்த்தையில் பிழை, வாழ்வையே பிழையாக மாற்றும். பச்சோந்தியின் நாக்கு அதன் உடலின் நீளத்தை விட இரு மடங்கு பெரியது. நீல திமிங்கலத்தின் நாக்கு ஒரு யானையின் எடைக்கு இணையானது. யோசித்துப் பாருங்கள். மனித நாக்கு உடலில் எத்தனை சிறயது. பலரும் பேச்சு வழங்கில் "நாக்கில் நரம்பில்லாமல் பேசாதே" என்பர். அளவில் சிறிதானாலும் நாக்கின் விளைவு அளப்பரியது. அதனால் வள்ளுவர் "நா காக்க" என்கிறார். சொல், ஆற்றும், மாற்றும் ஏற்றும். சொல் சக்தி, யுத்தி, சக்தி, முக்தி தரும்.

**உடல்மொழி:** நம்முடைய கருத்துப் பரிமாற்றங்களில் 55 சதவீதம் உடல் மொழியாலும், 38 சதவீதம் குரல் தொனியாலும், வெறும் 7 சதவீதம் மட்டுமே வார்த்தைகளாலும் வெளிப்படுத்தப்படுகின்றன என்று கண்டறிந்தார் உளவியல் பேராசிரியர் ஆல்பர்ட் மெஹராபியன். மொழி உதடுகளில் இருந்து வரும் வார்த்தைகளில் மட்டும் அல்ல; உடல் அசைவுகளும் ஆயிரம் மொழி பேசும், கண்களில் ஆரம்பித்து கை அசைவுகள், நிற்கும் பாங்கு என உடலின் ஒவ்வொரு அசைவிற்கும் வார்த்தைகளோடு நெருங்கிய  தொடர்பு உள்ளது.

வாய்ப்பேச்சு செயலற்றுப் போகும் போது கண்கள் பேசும். வாய்ப்பேச்சின் மவுனத்தில் மனங்கள் உரையாடும். வார்த்தைகளின் அலைவரிசையை வைத்து நாம் எந்த உணர்வில் இருக்கிறோம் என கண்றியலாம்.

மனிதனின் உடலில் வெளிவரும் அனைத்தும் கழிவுகளே. உதிர்ந்த முடி, உமிழ்ந்த கோழை, குடலின் கழிவுகள், தோலிலிருந்து வெளிவரும் வியர்வை அனைத்துமே கழிவுகளாகவே வெளிவருகின்றன. ஆக்சிஜனும் மனிதனுக்குள்ளே சென்றால் கார்பன் டை ஆக்சைடாக வெளி வருகிறது. மனிதன் நினைத்தால் தன்னில் இருந்து வெளிவரும் சொல்லை மட்டுமே "வாழ்த்தாகவும் மாற்றலாம், வசையாகவும் மாற்றலாம்". தன்னுள் நுழையும் ஒன்றை தன் விருப்பப்படி மாற்ற முடியும் என்றால் அது சொல் மட்டுமே ஆகும்.

**வார்த்தை அழகானால்...**

ஒரு மனிதன் பேசுவதற்குப் பழக மூன்று முதல் ஐந்து வயது ஆகிறது. ஆனால் எப்படிப் பேச வேண்டும், எங்கு பேச வேண்டும், எந்நேரத்தில் பேச வேண்டும் என்று கற்பதற்கு ஆயுட்காலம் முழுதும் தேவைப்படுகிறது. ஒரு மனிதனின் வார்த்தை அழகானால் வாழ்க்கை அழகாகும். வார்த்தைகளை கவனமாக கையாள வேண்டிய மூன்று தருணங்கள் உண்டு. முதலாவது நாம் நமக்குள் பேசும் சுய பேச்சு, 2வது நம் உறவுகளுக்கு இடையில் பேசும் பேச்சு, இறுதியாக நம் தொழில் முறை பேச்சு. இந்த மூன்று தருணங்களில் வார்த்தைகளில் நிதானம் இருந்தால் நிச்சயம் நல்ல நிலையை அடையலாம்.

"தீயினாற் சுட்டபண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு" ...

தீப்புண்ணை விட, நா உண்டாக்கும் புண் பெரிது என்று திருவளளுவர் காட்டிய உவமையை விட வேறு உவமை வேண்டுமா சொல்லின் ஆற்றலைச் சொல்ல? மனிநிலைக்குத் தகுந்தாற் போல் வார்த்தைகள் பேசலாம். ஆனால் மனநிலை மாறும்;  பேசிய வார்த்தை மாறாது.

**பேசாத வார்த்தைகள்...**

பேசாத வார்த்தைகளுக்கு நீ எஜமான், பேசிய வார்த்தைகளுக்கு நீ அடிமை. மற்றவர்களை அடக்கி ஆள்பவன் சர்வாதிகாரியாக இருக்கலாம். ஆனால் எவன் ஒருவன் தன் நாவை அடக்கி ஆள்கிறானோ அவனே சரியான அதிகாரி. அவனின் காலடியில் உலகம் இருக்கும்.

நல்ல வார்த்தைகளைப் பேசுபவர்கள் எல்லாம் ஒழுக்கமுடையவர்கள் என்று கூற இயலாது. ஆனால் நல்லொழுக்கம் உடையவர்கள் நல்ல வார்த்தைகளை மட்டுமே பேசுவர். ஏனெனில் ஒரு மனிதனின் ஒழுக்கத்தின் முதல் காரணியாகக் கூறப்படுவது அவனது வார்த்தைகளே.

டாக்டர் மசாடு எமோட்டோ என்ற ஆய்வாளர் 1990களில் நீரின் மீது வார்த்தைகளின் தாக்கத்தை வெளிப்படுத்தி வார்த்தைகள் ஓர் அதிர்வைக் கொண்டுள்ளன என தெளிவுபடுத்தினார்.

அவர் பல குடுவைகளில் தண்ணீர் நிரப்பி, சில குடுவையில் நேர்மறை வார்த்தைகளையும், மற்ற குடுவையில் எதிர்மறை வாசகங்களையும் எழுதி அதில் நீர் ஊற்றி பின் அதனை உறைய வைத்தார். "முட்டாள்" என்ற எதிர்மறையான வார்த்தையும், "அன்பு" என்ற நேர்மறையான வார்த்தையும் அதில் பயன்படுத்தப்பட்டது. நேர்மறையான வார்த்தைகள் எழுதப்பட்ட குடுவையில் தண்ணீரில் அழகான பனிப்படிகங்கள் உருவாயின. எதிர்மறை வார்த்தைகள் எழுதப்பட்ட குடுவையில் வசீகரமற்ற படிகங்கள் உருவாகியிருந்தன. இதன் மூலம் நம் வார்த்தைகள் அதிர்வுகளை ஏற்படுத்தும் என்பது உறுதியாகிறது.

**பெண்ணின் மனது...**

பெண்களின் மனதைப் பிரதிபலிக்கும் மிக முக்கியமான குறள் இது.

"வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து
வாழ்வாரின் வன்காணார் இல்"

தம் காதலரிடமிருந்து ஓர் இன்சொல் கூடப் பெறாமல் வாழும் மனைவியைப் போல் கொடியவர் உலகில் யாரும் இல்லை. திருவள்ளுவர் காலம் முதல் இன்று வரை மனைவியை மகிழ்விப்பது கணவனின் பாராட்டு மட்டுமே என்பது தெளிவாகிறது. பிரியமானவர்கள் சொல்லும் சிறு சொல்லும் பன்மடங்கு பலம் தரும்.

கணவன் மனைவி இடையே பயன்படுத்தப்படும் எதிர்மறை வாக்கியங்கள் புற்றுநோய் செல்லாகும். இவற்றை ஆரம்பித்தில் சரி செய்யா விட்டால் பல்கிப் பெருகி உறவையே முறிக்கும். கணவன் மனைவி இடையேயான வாக்குவாதம் அவர்கள்

இருவரை மட்டும் பாதிக்கும். ஆனால் அப்பா, அம்மாவிற்கு இடையேயான வாக்குவாதம் ஒரு தலைமுறையையே பாதிக்கும்.

**தொழிலில் மேன்மை பெற...**

ஒரு மனிதன் பேச்சுத் திறமையை வளர்ப்பதன் மூலம் தன் வருமானத்தை அதிகரிக்கலாம் என்கிறார் லெஸ் ஜிப்ஸின். உரையாடலில் சுவாரசியத்தை வளர்க்க பேச்சில் நீங்கள் என்ற வார்த்தையை அதிகம் பயன்படுத்தி அவர்களைப் பற்றிய நேர்மறை செய்திகளை பேச வேண்டும் என்கிறார். எந்த தொழிலிலும் மேன்மை பெற நாணயம், நாநயம் இரண்டுமே இன்றியமையாதது.

ஒரு குறையை கூறும் முன் அதைப் பற்றிய நிறையை சொல்லி, பின் குறையைக் கூறி, முடிக்கும் போதும் பாராட்டுதலோடு முடிக்க வேண்டும். ஒருவரை சரியான நேரத்தில் சரியான சொற்களால் நுணுக்கமாக உணர்ந்து பாராட்டும்போது அது அவருக்கு பெரும்மகிழ்வைத் தரும். ஒருவரை ஐந்து நிமிடம் பேச விட்டால், அவரின் சொற்களை வைத்தே அவரின் குணம் என்ன என கணிக்கலாம் என்கிறார் டாக்டர். பேட்ச். மனிதர்கள் பயன்படுத்தும் வார்த்தைகளைக் கொண்டு அவர்கள் மன நிலை அறிந்து மலர் மருத்துவ முறையில் மருந்துகளை இவர் பரிந்துரைக்கிறார்.

**மவுனமே சிறந்த பதில்...**

நம் பேச்சிற்கு மரியாதை எங்கு இல்லையோ அங்கு மவுனமே பதில். தனக்குச் சமம் இல்லாதவரின் கூட்டத்தில் பேசும் பேச்சானது சாக்கடையில் சந்திய அமிர்தத்திற்கு ஒப்பாகும் (குறள் 720) என்கிறார் திருவள்ளுவர்.

ஒரு தந்தை இறக்கும் தருவாயில் மகனிடம் பழமையான கைக்கடிகாரத்தை விற்று வருமாறு கொடுத்தார். கடிகாரத்தை பார்த்து இதற்கு 500 ரூபாய் தேறும் என்றார் காயிலான் கடைக்காரர். எலக்ட்ரானிக் கடையில் ஆயிரம் ரூபாய் தேறும் என்றனர். பின்னர் புராதன பொருட்களை பொக்கிஷமாய் வைத்திருக்கும் நிறுவனத்தில் கடிக்காரத்தை காட்டியபோது ரூ. 15000 தருவதாகக் கூறினார்.

இந்த செய்தியை தந்தையிடம் கூறிய போது, மகனே இதுவே நான் சொல்லும் செய்தி. நீ இருக்கும் இடத்தில் இருந்தால் தான் உனக்கு மரியாதை என்றார். இது வார்த்தைக்கும் பொருந்தும்.

**மனிதர் வகை...**

சிந்திக்கும் திறனை வைத்து மனிதர்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. பேசுதவற்கு முன் யோசிப்பவர்கள்
2. பேசும் போது யோசிப்பவர்கள்
3. பேசிய பின் யோசிப்பவர்கள்
4. பேசுவார்களே தவிர யோசிக்க மாட்டார்கள்

இதில் நாம் எந்த வகையை சார்ந்தவர் என அறிந்து, நம்மை திருத்திக்கொண்டால் நாம் நாநலம் பெற்றவர்களாவோம்.

ஒரு விஷயத்தை பிரச்னையாக குறிப்பிட்டால் அது எதிர்மறை விளைவுகளை உடலில் தூண்டி நம் ஊக்கத்தைக் குறைக்கிறது. அதே விஷயத்தை சவால் என்று சொல்லிப் பார்க்கும்போது அதை எதிர்கொள்ளவதற்கான நேர்மறை சக்தி கிடைக்கும். உண்பதில் கட்டுப்பாடு உடலமைப்பிலும், உரைப்பதில் கட்டுப்பாடு உயர்விலும் தெரியும்.

– தினமலர்







Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**


நம்பிக்கைக்கும், வலிமைக்கும்
JSW COLOURON+ கூரைகள்
JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக
தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்
JSW Steel
ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.
18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.
போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63
கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.
Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in


நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்
Meerakunj
RIGID PVC PIPES, FITTINGS & TANKS
AN ISO 9001 : 2008 COMPANY
Trust us with all your Electrical Plumbing and Agri needs...
மீரா குஞ்ச் பாலிடிரேடர்
17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.
போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372
E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com


திரைப்படம் இடைவெளியில் விளம்பரம் செய்ய தொடர்பு கொள்ளவும் 88073 61098
யாழி ப்ரொடக்ஷன் வழங்கும்
ஐங்கேர்போ
எழுத்து இயக்கம் J.S.பிரீத்திகுமார்
சௌராஷ்ட்ரா மொழி திரைப்படம் மார்ச் 30 ஞாயிற்றுக்கிழமை
தமிழ்நாடு சேம்பர் ஆப் காமர்ஸ்-ல் திரையிட உள்ளது
டிக்கெட் முன்பதிவிற்கு 8807361098
MARCH 30th
விலை 150
SHOW TIMES
2:30PM 4:30PM 7:00PM
சினிமா தொழில்நுட்ப கேமராவை
பயன்படுத்தி எடுத்த சௌராஷ்டிரா திரைப்படம்
திரைப்படத்தை காண அனைவரும் வந்து ஆதரவு தருக

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2025-2027
Printed Matter

Date of Posting : 20.03.2025 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2025 - 2027
Date of Publication 20th of Every Month

0452 231 2293 / 98409 60846 / 90479 50885

UG CHEMI JAGSAN

U G கெமி ஜாக்சன்




(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)

5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009
E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com



VSOC Institute for Trauma Shoulder & Knee Sports Injury Arthroscopy Joint Replacement

வேல் மருத்துவமனை

வேல் சிறப்பு எலும்பியல் மையம்

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement


VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597

Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com

Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)

Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service




**சிறப்பம்சங்கள்**

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

**உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்**

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*




*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com